**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 24.04.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

- பருவ நிலை மாற்றத்தை சமாளிப்பதில் வனவள பாதுகாப்பு பணிகளுக்கு முக்கிய பங்கு இருப்பதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.
- இன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- பேரிடர் சம்பவங்களுக்கு ஏற்ற நெகிழ்வு தன்மை கொண்டதாக, உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தி உள்ளார்
- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சட்டீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

முர்மு (14)

பருவ நிலை மாற்றத்தின் விளைவுகளை சமாளிப்பதில் வனவள பாதுகாப்பு பணிகளுக்கு மிக முக்கிய பங்கு இருப்பதாக

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார். டேராடுனில் உள்ள தேசிய வன வள ஆராய்ச்சி கழகத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், பயிற்சி முடித்த இந்திய வனப் பணி அதிகாரிகளிடையே அவர் பேசுகையில், பூமியின் விலை மதிப்பற்ற இயற்கை ஆதாரங்களை பாதுகாப்பதே மனிதனின் கடமை என்றும், வன வளம் போன்ற இயற்கை ஆதாரங்களின் உரிமையாளர் போல நாம் நடந்து கொள்வது, வேண்டுமென்றே செய்யும தவறு என்றும் கூறினார். வன வள ஆராய்ச்சி கழகத்தில் படிப்பு முடிக்கும் அதிகாரிகள், வன வளத்தை பாதுகாத்து பெருக்கும் பொறுப்பை தங்களின் தோளில் ஏற்க வேண்டும் என்றும் குடியரசு தலைவர் கேட்டுக் கொண்டார். இந்திய வனப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 99 அதிகாரிகளுடன், நட்பு நாடான பூட்டானை சேர்ந்த 2 வனப் பணி அதிகாரிகளும், இம்முறை, டேராடுன் தேசிய வன வள ஆராய்ச்சி கழகத்தில் பயிற்சி முடித்துள்ளனர்.

*பஞ்சாயத்து ராஜ்1* (17)

இன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். கிராமப்புற இந்தியாவில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வரவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அடிமட்ட நிலையில் உழைத்து வரும் அனைவரையும் தாம் பாராட்டுவதாக, சமூக ஊடக பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் மக்களின் கனவுகளுக்கு சிறகு கொடுக்க அரசுதொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை ஒட்டி மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இன்று புதுடெல்லியில், அடிமட்ட நிலையில் அரசு நிர்வாகம் என்பது குறித்து, தேசிய கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இந்த ஒருநாள் கருத்தரங்கின் துவக்க விழாவில், பஞ்சாயத்து ராஜ் அமைச்சக செயலர் திரு விவேக் பரத்வாஜ் பேசுகையில், 73 ஆவது அரசியல் சாசன திருத்த சட்டத்தின் கீழ், பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து தேர்தல் முறையாக

நடத்தப்படுவதை பாராட்டினார். அனைத்து பஞ்சாயத்து அமைப்புகள் இடையே, நிதி ஆதாரங்களை சமமாக பகிர்ந்து அளிக்க வேண்டிதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

*பஞ்சாயத்து ராஜ்* 2(5)

மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலர் திரு சைலேஷ்குமார் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், வலுவான, துடிப்பான பஞ்சாயத்து அமைப்புகள் மூலமாகவே அதிகபட்ச வளர்ச்சியை சாதிக்க முடியும் என்றார்.

79 ஆவது அரசியல் சாசன திருத்த சட்டத்தின் கீழ், 1993 ஆம் ஆண்டு இதே நாளில் தான் நாட்டில் பஞ்சாயத்து ராஜ் முறை நிறுவப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

*மோடி கட்டமைப்பு* (14)

பேரிடர் சம்பவங்களை தாக்குப் பிடிக்கும் வகையில் நெகிழ்வு தன்மையுடன் கூடியதாக உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க

வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து புதுடெல்லியில் இன்று தொடங்கிய 2 நாள் சர்வதேச மாநாட்டில் வீடியோ செய்தி மூலம் உரையாற்றிய அவர், பேரிடர் சம்பவங்களுக்கு பிந்தைய, மீட்பு மற்றும் மறு சீரமைப்பு பணிகளுக்கு ஏற்றதாக, உள்கட்டமைப்பு வசதிகள் அமைய வேண்டும் என்றார். பேரிடர் சம்பவங்களால் தனி நபர்கள், குடும்பங்கள், சமூகங்கள் உட்பட அனைவரும் பாதிக்கப்படுவதால், பேரிடர் இழப்புகளை பணத்தால் அளப்பது, போதாது என்று பிரதமர் கூறினார். பேரிடர் சம்பவங்களின் பாதிப்புகள், நாடுகளின் எல்லைகளை தாண்டியதாக அமைவதால், உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தேர்தல் (16)

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 89 தொகுதிகளில் நாளை மறுநாள்

நடைபெற உள்ள 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இத்தொகுதிகளில் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 95 தொகுதிகளில் அடுத்தமாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள 3 ஆம் கட்ட மக்களவை தேர்தலில், இறுதியாக ஆயிரத்து 351 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் உள்ளனர்.

10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் மே 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், நாளையுடன் முடிவடைய உள்ளது.

8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 49 தொகுதிகளில் அடுத்த மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள 5 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை

நாளை மறுநாள் வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்க உள்ளது.

மோடி சட்டீஸ்கர் (16)

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக மே 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள, சட்டீஸ்கர் மாநிலம் சர்குஜா மக்களவை தொகுதியில், பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அட்டவணை பிரிவினர் மற்றும் பழங்குடியினர் இடஒதுக்கீட்டை குறைக்கவும் மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கவும் காங்கிரஸ் முயலுவதாக அவர் குற்றம் சாட்டினார். அட்டவணை பிரிவினர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினரின் உரிமைகளை தனது ஓட்டு வங்கிக்கு மாற்றுவதே காங்கிரஸ் கட்சியின் எண்ணம் என்றும், இதை எதிர்த்து இட ஒதுக்கீட்டை பாதுகாக்க, பாரதிய ஜனதா கட்சியால் மட்டுமே முடியும் என்றும் அவர் தெரிவித்தார். வலுவான சுயசார்பு இந்தியாவை விரும்பாதவர்கள் தான், எதிர்கட்சி கூட்டணியாக கை கோர்த்து,

பலவீனமான அரசு ஒன்றை உருவாக்க முயல்வதாக திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். வன்முறையை பரப்பும் சக்திகளை காங்கிரஸ் ஆதரிக்கும் நிலையில், மத்தியில் உள்ள பிஜேபி அரசுதான் தீவிரவாதம் மற்றும் நக்சல்வாதத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மோடி சேர்க்கை (5)

2 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக, மத்திய பிரதேசத்தில் வரும் 26 ஆம் தேர்தல் நடைபெற உள்ள, சாகர் மற்றும் ஹர்தா தொகுதிகளிலும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். 3 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக மே 7 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள போபால் தொகுதியிலும் பிரதமர் இன்று மாலை சாலை பவனி நடத்துகிறார்.

அமித்ஷா (12)

மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா இன்று கேரள மாநிலம் ஆலப்புழா பகுதியில் 2 ஆம் கட்ட மக்களவை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சிகளும், சிறுபான்மையினர் ஓட்டுகளை கவரும் நோக்கத்துடன் கேரளத்தில் தீவிரவாதத்தை தூண்டுவதாக அவர் குற்றம் சாட்டினார். பிஜேபி ஆட்சியில், PFI போன்ற அமைப்புகளுக்கு இடமே இராது என்றும் அவர் குறிப்பிட்டார். INDI கூட்டணி என்ற பெயரில் டெல்லியில் ஒரே மேடையை பகிர்ந்து கொள்ளும் காங்கிரசும், இடதுசாரி கட்சிகளும் கேரளத்தில் ஒன்றை ஒன்று எதிர்ப்பது எப்படி என்றும் அவர் வினவினார். இதற்கிடையே, மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி பிரியங்கா வாத்ரா இன்று கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கார்கே (13)

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய வரலாறு காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்றும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டம், கல்வி உரிமை சட்டம், தகவல் உரிமை சட்டம் போன்ற நடவடிக்கைகளை இதற்கு சான்றாகும் என்றும் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே கூறியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற சமூக நீதி மாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். சமுதாயத்தை ஒரே நாளில் மாற்றி விட முடியாது என்றும், ஆழமான விவாதங்கள் மற்றும் சட்டங்கள் மூலமாகவே மாற்றங்களை கொண்டு வர முடியும் என்றும் திரு மல்லிகார்ஜீன கார்கே கூறினார். காங்கிரஸ் தலைவர்கள் இந்த இரண்டையுமே உறுதிப்படுத்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டார். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

*காங்கிரஸ் (7)*

பாரதிய ஜனதா கட்சி, பண வீக்கம், வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகளை சந்திக்காமல் விலகி ஓடுவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி சுப்ரியா ஸ்ரீநாதே இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடையே பேசுகையில், நிஜமான பிரச்சனைகளை சந்திக்கும் துணிவு பாரதிய ஜனதாவிற்கு இல்லை என்றும், பண வீக்கம் போன்ற முக்கிய பிரச்சனைகளை தேர்தல் காலத்தில் கூட பேசப்படாமல் போனதற்கு இதுவே காரணம் என்றும் கூறினார்.

*ஐபிஎல் (6)*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்றிரவு 7.30 மணிக்கு டெல்லியில் நடைபெறும் போட்டியில், டெல்லி-குஜராத் அணிகள் மோத உள்ளன. நேற்றிரவு, சென்னை-லக்னோ அணிகளுக்கு இடையே, சென்னையில் நடைபெற்ற போட்டியில், லக்னோ அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஐபிஎல் புள்ளி

பட்டியலில் தற்போது லக்னோ அணி 4 ஆவது இடத்திலும், சென்னை அணி 5 ஆவது இடத்திலும் உள்ளன.

வானிலை (15)

இன்றும் நாளையும், வட தமிகத்தின் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் 42 டிகிரி செல்சியஸ் வரையிலும், இதர மாவட்டங்களின் சமவெளி பகுதி மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், 38 டிகிரி செல்சியஸ் வரையிலும் வெப்ப நிலை பதிவாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது, ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் ஈரோடு மாவட்டத்தில் வெப்ப அலை வீசியது. சேலத்தில் 42.3 டிகிரி செல்சியஸ், மற்றும் ஈரோட்டில் 42 டிகிரி செல்சியஸ்

வெப்பநிலை பதிவாகி உள்ளது. இதற்கிடையே, தமிழக பகுதிகளின் மேல், வளி மண்டலத்தின் கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுவதால், தென் தமிழக மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பருவ நிலை மாற்றத்தை சமாளிப்பதில் வனவள பாதுகாப்பு பணிகளுக்கு முக்கிய பங்கு இருப்பதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

இன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பேரிடர் சம்பவங்களுக்கு ஏற்ற நெகிழ்வு தன்மை கொண்டதாக, உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தி உள்ளார்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சட்டீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.